

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கணேஷ் உள்பட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர பேரூர் கழக செயலாளர்கள், BLA2 ஒருங்கிணைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பொறியியல் படிப்பு வரை தமிழ் மொழிப்பாடம் கட்டாயம் என்று கொண்டு வந்தது –

# இட ஒதுக்கீட்டுக்காகப் பாடுபட்டது ‘திராவிட மாடல்’ ஆட்சிதான்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் க.பொன்முடி விளக்கம்!

சென்னை, மார்ச் 22 -

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் க.பொன்முடி, “பொறியியல் படிப்பு வரை தமிழ் மொழிப்பாடம் கட்டாயம் என்று கொண்டு வந்ததும் - இட ஒதுக்கீட்டுக்காகப் முழுக்க முழுக்கப் பாடுபட்டதும் திராவிட மாடல் ஆட்சிதான்” என்று குறிப்பிட்டார்.



சட்டப்பேரவையில் - அமைச்சர் க.பொன்முடி குறிப்பிட்டதாவது:-

பொறியியல் கல்லூரிகளில் *Civil Engineering*, *Chemical Engineering* ஆகிய பிரிவுகள் மட்டும்தான் தமிழ்வழியில் இருந்தது. எல்லா பொறியியல் பாடப் பிரிவுகளையும் தமிழ் வழியில் கொண்டுவர வேண்டும் என்று கருதி, ஆனால், அப்போது தமிழ் கட்டாயப் பாடமாக பொறியியல் கல்லூரிகளில் இல்லாமல் இருந்தது. பொறியியல் படிப்பு படிக்கின்ற அனைவரும் தமிழ்மொழிப் பாடத்தையும் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்று கொண்டு வந்தவரும் முதலமைச்சர் தளபதி அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருளாதார அடிப்படையிலே இட ஒதுக்கீடு கொண்டு வர வேண்டுமென்று அன்றைய முதலமைச்சர் சொல்லி, அதன்பிறகு, அதற்காக மக்கள் அளித்த தீர்ப்புதான் அந்தத் தேர்தலிலே தோல்வியடைந்து, அது மாற்றியமைக்கப்பட்டது இந்த இட ஒதுக்கீட்டுக்காக முழுக்க முழுக்க பாடுபட்டது திராவிட மாடல் ஆட்சிதான். தலைவர் கலைஞர்தான். பேரறிஞர் அண்ணாதான். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது இருக்கிற நம்முடைய தளபதிதான். இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் மாநகராட்சியில்

# கோடையில் சீரான குடிநீர் விநியோகத்தை கண்காணிக்க வேண்டும்!

## ஆய்வுக் கூட்டத்தில் மேயர் எஸ். ஏ. சத்யா அறிவுறுத்தல்!

கிருஷ்ணகிரி, மார்ச்22 -

கோடை காலத்தில் சீரான குடிநீர் விநியோகத்தைக் கண்காணிக்க வேண்டும் என ஓசூர் மாநகராட்சியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

ஓசூர் மாநகராட்சியில் உள்ள 45 வார்டுகளில் கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையைத் தடுக்க முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்வது தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாநகராட்சி அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்துக்கு, மேயர் சத்யா தலைமை வகித்தார். கூட்டத்தில், ஆணையர் (பொ) மாரிசெல்வி முன்னிலை வகித்தார். கூட்டத்தில், ‘கோடைகாலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் இடங்களைக் கண்டறிந்து சீரான குடிநீர் விநியோகம் செய்ய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிநீர் பற்றாக் குறையைத் தடுக்க முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்வது தொடர்பான ஆய்வுக் கூட்டம் ஓசூர் மாநகராட்சி அலுவலகத்தில் நடந்தது. இதில் மேயர் சத்யா பேசும்போது, நீர் மேலாண்மை திட்டங்களைச் சரியான முறையில் மேற்கொள்ள வேண்டும். கோடை காலத்தில் பொது மக்களுக்கு தடையின்றி தொடர்ந்து தண்ணீர் விநியோகம் செய்யப்படுவதைக் கண்காணிக்க வேண்டும். குடிநீர்விநியோகத்தில் இடையூறுகள் ஏற்பட்டால் உடனடியாக சீர் செய்ய வேண்டும். தண்ணீர் குறைவாக உள்ள ஆழ்துளை கிணறுகளைக் கண்டறிந்து, தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மாநகராட்சி செயற்பொறியாளர் சேவியர், உதவிப் பொறியாளர், மின் பணியாளர்கள், குடிநீர் ஆய்வாளர்கள், குழாய் திறப்புநர்கள் மற்றும் குடிநீர் விநியோகப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### “மாநில கல்விக் கொள்கை – நீதிபதி முருகேசன் குழு அறிக்கை பரிசீலனையில் உள்ளது”– முதல்வர் அறிவிப்பு

# இரு மொழிக் கொள்கைதான் ; இந்த அரசின் திடமான கொள்கை!

## சட்டப்பேரவையில் – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

சென்னை, மார்ச் 21 -

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் நிதிநிலை மற்றும் வேளாண் பட்ஜெட் மீதான விவா தத்தில் கலந்து கொண்டு பெண்ணாகரம் ஜி.கே.மணி (பாமக) பேசியபோது நடைபெற்ற விவாதம் வருமாறு:

**ஜி.கே.மணி:** கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் எந்தளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற அந்த அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும். அடுத்தது, தாக்கல் செய்யப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட அறிக்கை மக்களுக்கு என்ன விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது, என்ன தாக்கங்களை ஏற்படுத்தி இருக்கிறது என்ற இரண்டு அறிக்கைகளை வெளியிட கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையானது எல்லா கோணங்களிலும், ஒன்றையும் விடாமல் அலசி, ஆராய்ந்து பார்த்து தயாரிக்கப்பட்டதாகக் கருதுகிறேன்.

**அமைச்சர் எ.வ.வேலு:** கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பணம் ஒதுக்கியது, செலவு செய்யப்பட்டது மக்கள் மத்தியிலே என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார். ஆனால் அதை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த முடியாது. செலவு செய்வதைத் தான் வரவுசெலவில் கொண்டுவர முடியும்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** நமது திட்டக் குழு, ஏற்கெனவே முதல்வர் தந்துள்ள விடியல் பயணம் திட்டம். மகளிர் விடியல் பயணம் இன்றைக்கு தமிழ்நாட்டில் மகளிரிடத்திலே மிகப் பெரிய குறிப்பி டத்தக்க தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது. அந்த தாக்கம் குறித்து, இந்தத் திட்டம் எந்தளவுக்கு மகளிருக்கு சரியான வகையிலே பயன்பட்டுள்ளது என்பது குறித்து ஒரு விரிவான ஆய்வு செய்து அதற்கான அறிக்கையையும் நமக்குத் தந்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலேதான் நிதிநிலை அறிக்கையிலே நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

ஜி.கே. மணி உரையாற்றுகிறபோது, மொழிக் கொள்கை குறித்து ஆய்வதற்காக நீதியரசர் முருகேசன் தலைமையிலே குழு அமைக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். நான் அதில் சிறு விளக்கம் அளிக்கிறேன். அது மொழிக் கொள்கைக்காக ஏற்பட்டிருக்கக்கூடிய *committee* அல்ல. *State Education Policy*மாநில கல்விக் குழுவிற்காக அமைக்கப்பட்டது. மொழிக் கொள்கையை பொறுத்த மட்டில் இந்த அரசு திடமாகவும், உறுதியாகவும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இருமொழி கொள்கைதான் இந்த அரசினுடைய கொள்கை. பேரறிஞர் அண்ணா அவர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு முதலமைச்சர் என்று இந்த வரிசையில் இருமொழி கொள்கைதான் இந்த அரசினுடைய திடமான கொள்கை.

இதையெல்லாம் ஆராய்வதற்கு ஒரு *committee*ஐ போட வேண்டும் என்ற அவசியமே எந்த காலத்திலும் இந்த அரசாங்கத்திற்கு ஒரு போதும் கிடையாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போல உறுப்பினர் அவர்கள் பேசுகிற போது, தமிழ்மொழி, கட்டாய பாட மொழியைப் பற்றி சொன்னீர்கள். அந்த சட்டம் இங்கே வருகிறபோது, இந்த அவையிலே நீங்களும், நானும்தான் அதைக் குறித்து கருத்துகளை நாம் இருவரும்தான் அன்றைக்கு பரிமாறிக்கொண்டோம் என்பது என் நினைவில் உண்டு. தமிழ்நாட்டிலே தமிழை ஒரு பாட மொழியாகக்கூட படிக்க முடியாமல் ஒருவர் பட்டப் படிப் பிற்கோ அதற்கு மேற்படிப் பிற்கோ செல்வதற்கு முடியும் என்ற ஒரு அவல நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் அன்றையதினம் இருந்த முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் 2006ல் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக சட்டமுன்வடிவை கொண்டு வந்தார். பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக அந்த சட்டமுன்வடிவை இந்த அவையிலே *propose* செய்யக் கூடிய வாய்ப்பை நான் அன்றைக்குப் பெற்றேன்.



இன்னும்கூட சொல்ல வேண்டுமென்றால், பயிற்று மொழியாக வர வேண்டுமென்கின்ற அவருடைய கனவு நீதிமன்ற நடவடிக்கையினால் தடைப்பட்டதற்கு பிறகு ஒரு பாட மொழியாகவாவது தமிழ் வர வேண்டுமென்கின்ற உணர்வோடு தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அது உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, உச்ச நீதிமன்றத்தி ற்கும் அந்த வழக்கு சென்று, உச்ச நீதி மன்றத்திலேயே அதற்கு சாதகமான தீர்ப்பு களைப் பெற்று, அந்த சட்டமுன்வடிவு நிலை நிறுத்தப்பட்டது. அதுதான் வரலாறு. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலக்கட்டம்வரை அது இருந்தது. அதற்கு பிறகு பிற் காலங்களிலே பல்வேறு சூழ்நிலைகள் உருவாகியிருக்கின்றன. அதுகுறித்த வழக்குகள் இன்றைக்கு இருக்கின்றன. நீங்கள் தெரிவித்ததைபோல அந்த வழக்குகளை நாம் மேற்கொள்வோம்.

**முதல்வர் மு.க. ஸ்டாலின்:** ஜி.கே.மணி சொல்வது போல மாநில கல்விக் குழுவை பொறுத்த வரையில் நீதிபதி முருகேசன் அரசிடம் ஒப்படைத்தது உண்மைதான். மறுக்கவில்லை. அது பரிசீலனையில் இருக்கிறது.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் மேற்கு ஒன்றியம், மைவாடி ஊராட்சி, கருப்புசாமி புதூரில் ரேசன் கடை முதல் பொதுக்கிணறு வரை ரூ 10 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தனர். இதில் மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் பங்கேற்றனர்.

